உ

திருச்சிற்றம்பலம்.

சிதம்பரமென்னும்

# திருப்புலியூர்வெண்பா.

மாரிமுத்துப்பிள்ளையவர்களால்

செய்யப்பட்டது.

இஃது

காஞ்சீபுரம்

**குமாரசாமிதேசிகராலும்**

புரசைப்பாக்கம் - இருசப்பமுதலியார்குமாரரும்

வேங்கடாசலமுதலியார்சகோதரருமாகிய

**சபாபதிமுதலியாராலும்**

பரிசோதிக்கப்பட்டுப்

புங்கனூர் - அக்கினிவம்சம் - மணியம் - நல்லதம்பி

பூபதிராயகர்குமாரரும் - இராமசாமிபூபதி

நாயகர்சகோதரருமாகிய

**கிருஷ்ணப்பபூபதிநாயகரால்**

சென்னைச்சங்கத்துத் தமிழ்ப்புலவர்

**திரு - வேங்கடாசலமுதலியார்**

சரஸ்வதி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

இஃது - இவருக்கு முக்கிய இஷ்டர்

புதுவை - சந்திரசேகரமுதலியார்குமாரராகிய

பு - சபாபதிமுதலியாரால்

நிறைவேறினது.

சாலிவாகனசகாப்தம் - ௲௭௱௬௰௩ பிலவஹு கார்த்திகைமீ

இதின்விலை - ரூ. வ.

உ

திருச்சிற்றம்பலம்.

# புலியூர்வெண்பா.

காப்பு.

பொன்னாருந்தில்லைப்புலியூர்வெண்பாவுக்குப் *
பன்னாளுமேத்திப்பணிகுவாம்..................நன்னாரி
கக்குஞ்சரப்பூங்கடுக்கையானீன்றகற்ப *
கக்குஞ்சரப்பூங்கழல். *

சொற்செறிவேதாந்தச்சுடர்த்தகரவித்தையதாம்
பொற்சபைநின்றோங்கும்புலியூரோ...............முற்சமணை
வீசுபதத்தானடித்தார்விற்கொண்டமர்விளைத்த
பாசுபதத்தானடித்தார்பற்று. (௧)

தன்கருமநீத்ததுன்மதன்முனடங்காணநிரம்
புங்கதியைத்தந்தபுலியூரோ...................கங்கையதி
மோகரத்தர்மாசடையார்மோதலையுப்பற்றவருட்
சாகரத்தர்மாசடையார்சார்பு. (௨)

பாதகஞ்செய்துற்சகனும்பண்டிறக்கக்கண்டுகதி
போதவுவந்திட்டபுலியூரோ......................வேதன்
சிரமதலையக்கணித்தார்சேர்த்துநரசிங்கத்
துரமதலையக்கணித்தாரூர். (௩)

நற்கதியைத்துற்றெரிசனன்மறையோனுட்களிக்கப்
பொற்கொடையாநல்கும்புலியூரோ..........சொற்கிளர்நா
லாரணமாறங்கத்தரம்பவளமேனியினோர்
நாரணமாறங்கத்தர்நாடு. (௪)

தாண்டுபுலிக்கால்கையுகிர்தானேர்மழமுநிவன்
பூண்டிருந்தர்ச்சிக்கும்புலியூரே .......... பாண்டியற்காய்
மாணிக்கங்காட்டினார்மாமறைப்பாலன்பாலால்
வேணிக்கங்காட்டினார்வீடு. (ரு)

தத்துதிரைப்பாலுததிதன்னையழும்வெம்புலியின்
புத்திரனுக்கீயும்புலியூரே .......................... பத்தித்
தவந்தழைத்தசித்தனார்தாஞ்சமைத்தசேயை
யுவந்தழைத்தசித்தனாரூர். (சா)

மெய்திகழுஞ்சேடனுருவிட்டுப்பதஞ்சலியாய்ப்
பொய்கையுழிவந்தபுலியூரே ......................... வையை
வரம்புகட்டுவாரானார்மாமுநிக்குப்பார்சா
கரம்புகட்டுவாரானார்காப்பு. (எ)

மாசிலாவம்புலிக்குமாதுமைக்குமாநடத்தைப்
பூசமதிற்காட்டும்புலியூரே ......................... பேசரிய
வித்தகத்தார்கண்டிறந்தார்வீடுறச்செய்தங்கசற்கா
மத்தகத்தார்கண்டிறந்தார்வாழ்வு. (அ)

முன்னாகச்சிங்கவன்மன்மூழ்கச்சிவதடத்திற்
பொன்னாகமாக்கும்புலியூரே ............ யொன்னார்க்காக்
குன்றுவளைவிற்போர்கொளவெடுப்போர்கூடறனிற்
சென்றுவளைவிற்போர்செறிவு. (கூ)

அள்ளியுவாயோதனமொன்றந்தணன்வாய்வீழ்த்தகொடிப்
புள்ளருள்பெற்றுய்யும்புலியூரே ................. யுள்ளமது
சோதிக்கவருவார்தொண்டரவோடுன்வசமென்
றோதிக்கவருவாரூர். (ய)

சென்றேநலந்தீதுசெய்யிலொன்றுகோடியதாய்ப்
பொன்றாதுநீடும்புலியூரே ..................... நின்றாடும்
பொன்னம்பலவர்புகன்மறையினாலுணரா
வன்னம்பலவர்மனே. (யக)

மாக்கள்வினைபாலவயிரவன்கைச்சூலத்தாற்
போக்கிநலந்தந்தபுலியூரே.........................சாக்கியர்கன்
மோதக்கனிவிருந்தார்முன்வசியமாதளித்த
சூதக்கனிவிருந்தார்தோய்வு. (௰௨)

சொல்லாச்சிவசன்மாசோமநாதர்க்குவினைப்
பொல்லாங்ககற்றும்புலியூரே.........................வில்லா
வணக்குஞ்சமத்தினார்மாமலைதோண்மேன்மா
சுணக்குஞ்சமத்தினார்தோய்வு. (௰௩)

ஆழ்ந்தகடற்செல்வற்கடர்பிரமகத்திதனைப்
போழ்ந்தறுத்தாளுந்தென்புலியூரே.........தாழ்ந்தவரைத்
துய்யகதியேற்றினார்சோதிவெள்ளிவெற்பனைய
வெய்யகதியேற்றினார்வீடு. (௰௪)

வன்மதிநீசன்கடனீர்மாசிமகத்தாடவவன்
புன்மைதவிர்த்தாளும்புலியூரே.............தென்மதுரைக்
கற்களிறுக்கிக்களித்தார்கானவனெச்சிற்சுவைக்கப்
பற்களிறுக்கிக்களித்தார்பற்று. (௰௫)

மேவுநடுக்கங்கடமைவிட்டியெவர்க்குங்காயாம்
பூவண்ணன்காக்குந்தென்புலியூரே.............கோவணஞ்சேர்
தட்டிடவென்றெப்பினார்தம்பிறவிவல்லிருளை
யட்டிடவென்றெப்பினாரார்வு. (௰௬)

நேயமனையாளுடனேநீலகண்டனார்முதுமை
போயிளமைபெற்றபுலியூரே.........................தீயமலத்
தோடும்போதங்கெட்டாருள்ளத்தாரன்பிருவர்
தேடும்போதங்கெட்டார்சேர்வு. (௰௭)

அன்னாட்சிகைவிளக்கேற்றன்பினுக்குமுத்திகணம்
புன்னுயர்க்கீயும்புலியூரே.........................யெந்நாளு
மன்பர்கருத்திடையாரன்பரிடத்தன்பில்லா
வன்பர்கருத்திடையார்வாழ்வு. (௰௮)

தாவோமத்தானீசந்தான்போய்க்கதிநாளைப்
போவோமென்பார்சேர்புலியூரே .............. மாவாகச்
சம்புவைச்செய்தேமுனிந்தார்தந்தவத்திசாயவில்லி
லம்புவைச்செய்தேமுனிந்தாரார்வு. (௰௯)

சிற்கசனத்தற்சொருபச்சிரகத்தைச்சேந்தனுமுன்
புற்கையிட்டுப்பெற்றபுலியூரே............நற்கொடிக்கோர்
தாயுமானார்கொடியார்தங்கள்வினைத்தீங்கொடியார்
பாயுமானார்கொடியார்பற்று. (உ௰)

விண்டலமேபோற்றும்விராட்புருடனரிதய
புண்டரிகமானபுலியூரே .................... சண்டன்வலி
மைத்தாம்பொழிவித்தார்வற்றொடுமார்க்கண்டருக்கன்
பைத்தாம்பொழிவித்தார்பற்று. (உக)

குஞ்சிதத்தாட்கண்டவனைக்கும்பிடப்பெற்றோர்கள்விரும்
புஞ்சிவவீடெய்தும்புலியூரே .. ............... செஞ்சடையிற்
சின்னவிளம்பிறையார்தில்லைமறையோருருநா
மென்னவிளம்பிறையாரில். (உஉ)

தேவமறையாகமங்கடென்கயிலையென்றுதொழப்
பூவுலகிலோங்கும்புலியூரே .................. மூவுலகும்
வந்துதிக்குமுன்புணர்வார்வாழ்வருளவப்பர்தம்பா
தந்துதிக்குமுன்புணர்வார்சார்பு. (உ௩)

நன்மாதவத்தொருவனுடும்படிக்கிரங்கிப்
பொன்மாரிபெய்யும்புலியூரே ................ முன்மார்பிற்
பன்னாகத்தந்தார்பகர்தமிழ்க்காச்செங்கரனைப்
பொன்னாகத்தந்தார்புரி. (உ௪)

நாமகடென்கீழ்த்திசையினாட்டுங்குணதிசையிற்
பூமகளர்ச்சிக்கும்புலியூரே ................... தாமலதோ
ராதாவில்லார்வாழ்த்தடியர்தமக்கங்கையிற்பொற்
பூதாவில்லார்வாழ்புரம். (உ௫)

வாசனைசேர்மாமலரான்மாமறைமூவாயிரவர்
பூசனைசெய்தேத்தும்புலியூரோ ................ யோசைதரு
பாற்சங்கரியார்பதுமத்திருக்கணிந்தோர்
பாற்சங்கரியார்பதி. (உசு)

ஓதுபசியாலெருவையுண்ணவிறக்குங்கயற்கப்
போதுகதிநல்கும்புலியூரோ .................... பூதிவெகு
வாயிடுமாகத்தனார்வன்கமர்வாய்மாவடுவை
வாயிடுமாகத்தனார்வாழ்வு. (உஎ)

பத்தரைக்கொண்டேபேசாப்பாவைதனைப்பேசுவித்துப்
புத்தரையாட்கொள்ளும்புலியூரோ ............... முத்திதரும்
பஞ்சாக்கரனார்பணிவார்வினையழன்முன்
பஞ்சாக்கரனார்பதி. (உஅ)

கண்ணுறுபோதேபவத்தைக்காய்ந்தருளுமீரைந்து
புண்ணியதீர்த்தஞ்சேர்புலியூரோ .......... பெண்ணொருபா
கத்திருந்தார்கட்டரியார்கைகூப்பிநின்றுதுதிக்
கத்திருந்தார்கட்டரியார்காப்பு. (உகூ)

முத்தீயிடையினவிழுந்தச்சொரிந்துமறைப்
புத்தேளோமஞ்செய்புலியூரோ ............ மெய்த்தோளின்
மாதுளவனத்தன்வணங்குபதனகத்தோர்
மாதுளவனத்தன்மனை. (௩0)

ஓர்கலையெங்கெங்குமுலாவியர்த்தயாமத்திற்
பூரணமாயொன்றும்புலியூரோ ................ காரணமாம்
பார்த்தாண்டவனார்பணித்தாலுமுள்ளன்பைப்
பார்த்தாண்டவனார்பதி. (௩க)

சோதிவளரும்மடியாய்த்தோன்றுதெவர்க்குமனு
பூதிவெளியாகும்புலியூரோ ...................... மாதெனவங்
கந்தரவல்லானுளுங்கைக்கொளப்பொற்றுளமிடுங்
கந்தரவல்லானுளுங்காப்பு. (௩உ)

வானமுலகேத்துதிருவாசர்பசியாறவுமை
போனகமளிக்கும்புலியூரே..........................யானசன
நம்பத்துவிதத்தார்நாடரியார்மோனத்தார்
நம்பத்துவிதத்தார்நாடு. (௫௩)

வாணகையாற்றிபுரத்தின்வாழ்மூவரைக்காவல்
பூணவளித்தாளும்புலியூரே..........................யாணவமா
மெய்க்கருத்துவந்தனையான்மிக்குழலாமிக்கோர்கண்
மெய்க்கருத்துவந்தனையான்வீடு. (௫௪)

சம்பந்தர்க்கந்தணர்கடம்மைச்சிவகணமொப்
பும்பண்பைக்காட்டும்புலியூரே..........................யம்புலிவா
னெட்டாகமஞ்சார்ந்தானேத்தமறையோடிருபா
னெட்டாகமஞ்சார்ந்தானில். (௫௫)

வைத்தவருளாற்கோவைவாதவூரன்புகலப்
புத்தகத்திற்றீட்டும்புலியூரே..........................துத்தியரா
வானத்தமரிந்தார்மாமவுலியாரொழுநா
வானத்தமரிந்தார்வாழ்வு. (௫௬)

சீருற்றசரீரிசேக்கிழார்க்காதிமொழி
பூரித்துரைக்கும்புலியூரே..........................நீரைக்
கரந்துவைத்தவேணியார்காதினிற்ருவிக்கூய்க்
கரந்துவைத்தவேணியார்காப்பு. (௫௭)

வாட்கையசவாணிபன்சொன்மாநூலிணைப்படிக்கற்
பூட்கையெடுக்கக்கொள்புலியூரே..........................தாட்கமலப்
போதுளவனத்தன்புருகூதன்போற்றுமந்திப்
போதுளவனத்தன்புரி. (௫௮)

ஆசையெட்டினுக்கிறையுமாசையெட்டியாசைவிடப்
பூசையிட்டுப்போற்றும்புலியூரே..........................பேசவெட்டா
வேதாந்தரும்பரமர்விண்ணுடளந்தநெல்லை
வேதாந்தரும்பரமர்வீடு. (௫௯)

சூரியனும்பச்சைத்துழாய்முகிலும்பூசனைதென்
பூருவதிக்கிற்செய்புலியூரோ....................சூரியவே
லாறுமுடிக்குமரனுபதேசம்பெறுவா
னாறுமுடிக்குமரனூர்வு. (சய)

மேனிலத்தொப்பாலயங்கண்மெய்க்கவுடர்கோன்செழுஞ்சாம்
பூனதத்தாற்செய்யும்புலியூரோ...............ஞானமுற்ற
சம்பந்தராத்தர்தராதலமெலாம்புணருஞ்
சம்பந்தராத்தர்தலம். (சக)

உக்கிரசாமுண்டியும்பண்டூர்த்தநடத்தானுணம்
புக்குவந்தித்தேத்தும்புலியூரோ....................யக்கு
வலையங்கழுத்துளவன்வாரியின்மீனுக்கா
வலைய்ங்கழுத்துளவன்வாழ்வு. (சஉ)

மாதவத்துமாணிக்கவாசகர்மன்றுள்ளொளிக்குட்
பூதியத்தோடொன்றும்புலியூரோ..........கேதகைப்பூந்
தாமங்கழித்தளிப்பார்தன்னெடண்டமூழிதொறுந்
தாமங்கழித்தளிப்பார்சார்பு. (சங)

நாட்டமுறுமாசிமகநாள்வணிகன்பாசவினைப்
பூட்டற்றுத்தானுந்தென்புலியூரோ..................மாட்டி
லெழுதுங்கரப்பரனோடதனிற்கோவை
யெழுதுங்கரப்பரனூரில். (சச)

செப்புநடத்தைத்தேசிகநமசிவாயர்களிப்
புப்பெறக்காட்டுந்தென்புலியூரோ..........யொப்பதிலா
வோரோற்றினன்மறையானுள்ளத்திரங்குமடி
யோரோற்றினன்மறையானூர். (சரு)

நந்திமுதற்றேவர்பலர்ஞானமுனிவோர்பூசை
புத்திமகிழ்ந்தேத்தும்புலியூரோ..............தந்தனையைக்
காமருகேசஞ்சரிப்பாரன்பினுக்குமுத்தியிட்டோ
ராமருகேசஞ்சரிப்பாரார்வு. (சசா)

வன்பர்புலையோனெனினும்வாசஞ்செயிலவர்தம்
புன்பிறவிமாற்றும்புலியூரே..................யன்புதிகழ்
வத்திரங்களைந்தார்வனத்திருடிமாதரிடை
வத்திரங்களைந்தார்மனை. (சஎ)

சாதல்பிறப்பைப்புலைப்பெற்றானுக்குமாபதியாற்
போதல்செய்வித்தபுலியூரே..................சோதிப்
பாசங்கரனார்பணிமதிசூடுந்தத்
பாசங்கரனார்பதி. (சஅ)

நாட்டிலிறந்தோரான்மாநல்லெண்பவ்வெல்லைதனிற்
போட்டிடவீடெய்தும்புலியூரே............கோட்டிபமூர்
வாசவனசத்திரன்வாழ்த்தித்தொழுஞ்சரண
வாசவனசத்திரன்வாழ்வு. (சகூ)

ஏழுலகேத்தொன்பானிலிங்கப்பிரதிட்டை
பூழியர்கோன்செய்தபுலியூரே...............வாழ்சிவலோ
கத்தர்கணிச்சிப்படையார்காதலித்துன்னுதநெஞ்ச
கத்தர்கணிச்சிப்படையார்காப்பு. (ருo)

ஆனபலசத்திரத்துமாழ்கமலவாவியினும்
போனகம்பாலிக்கும்புலியூரே..............யானெனுந்தற்
போதமொழிவாயினர்புந்திச்சுடரொளியார்
வேதமொழிவாயினர்வீடு. (ருக)

ஓதிமமும்வேந்தருலவுநெடுவீதிகளும்
போதகமேறித்தும்புலியூரே...................மாதவர்க்கு
வீடளித்தார்மாட்டினார்வேணிபுயமீதிதழி
யேடளித்தார்மாட்டினரில். (ருஉ)

மாத்தயங்குசோலைகளும்வந்தவப்பர்தாமுமகிழ்
பூத்தழைக்கப்பாடும்புலியூரே..................வாய்த்தபுலி
யோடப்பதஞ்சலியாருண்மகிழமன்றினட
மாடப்பதஞ்சலியாரார்வு. (ருங)

கட்பங்கயமின்னார்கார்க்குழலிலந்தியினிற்
புட்பஞ்சரஞ்சேர்புலியூரே.......................நட்பினெடு
மெச்சிக்கும்பிட்டார்மெலிவொழிப்பார்வந்தியிட
விச்சிக்கும்பிட்டாரிடம். (ருச)

சாலொலிநீடாவணமுந்தம்பதியைமாதருங்கற்
பூரமணந்துன்னும்புலியூரே.......................பாரினுட
னாதையங்கியம்புவானுட்புறம்பான்வேசிபக்கத்
தாதையங்கியம்புவான்றேய்வு. (ருரு)

மீத்தாவிமகரனைமீன்பாய்ந்தரம்பையினைப்
பூத்தராறுடைக்கும்புலியூரே.......................கூத்தாடிப்
பாதஞ்சிவந்தார்பழிக்காலவாயினிலோர்
போதஞ்சிவந்தார்புரி. (ருசு)

அற்பகற்சோட்டன்றிலன்பாலாந்தவத்தாலும்பருக்கும்
புற்பதிமேலாகும்புலியூரே.......................வெற்பினுரு
வந்தக்கழலொளியார்மன்றுளெவருக்குமர
விந்தக்கழலொளியார்வீடு. (ருஎ)

மாவனஞ்சூழ்காவிடத்துமாலுறுமின்னாரிடத்தும்
பூவைவண்டூதுந்தென்புலியூரே.......................நாவளைந்து
பிட்டிரதமென்றூர்பிரமப்பாகாகொணர்வா
தட்டிரதமென்றூர்தலம். (ருஅ)

பண்டுதவஞ்செய்திடவும்பள்ளரலத்தாலுழவும்
புண்டரிகமல்கும்புலியூரே.......................விண்டுமறை
வேந்துமறியாரிருக்குமேயறியார்தீயகலோ
டேந்துமறியாரிருக்குமில். (ருகூ)

சாற்றுதிருத்தொண்டருஞ்செய்ச்சங்கினமுமுந்துமதி
போற்றவளமிக்கபுலியூரே.......................யேற்றுருவாய்ச்
சங்கத்தரங்கத்தர்தாங்கமகிழ்வோருமையோர்
பங்கத்தரங்கத்தர்பற்று. (சூ0)

தெள்ளிமையோர்போற்றுதொறுந்தேம்பொழிற்றேறுங்கனிச்
புள்ளிவருமால்சேர்புலியூரே ........ வெள்ளிச் [செம்
சயிலத்திருப்பார்சனிப்பிறப்பிலென்னைப்
பயிலத்திருப்பார்பதி. (௫௧)

தங்கவவைவீசவிக்கநத்தண்ணறைவண்டுண்ணவரும்
பங்கவரேசேரும்புலியூரே ........ யங்கைதனி
லேந்துதலையோட்டினாரேத்துமன்பர்தாய்முலைப்பான்
மாந்துதலையோட்டினார்வாழ்வு. (௫௨)

முத்திதரும்பூசையென்றுமூகைதனைப்பேசிடென்று
புத்தரவமாற்றும்புலியூரே ........ சித்திமதி
நேமிந்தாரத்தனார்நித்யகலியாணிசிவ
காமித்தாரத்தனார்காப்பு. (௫௩)

சொற்பழுத்தமாமுனியுஞ்சூழுந்துறவினரும்
புற்பதத்தையாரும்புலியூரே ........ யுற்பவித்த
கஞ்சமனைவீட்டினார்கம்பறித்தார்செம்பதத்தால்
வெஞ்சமனைவீட்டினார்வீடு. (௫௪)

நன்குற்றமாதருமந்நல்லார்கண்முன்றில்களும்
பொன்சற்படுக்கும்புலியூரே ........ மென்கட்
கமலவடிவந்தியார்கட்கருளார்ஞான
வமலவடிவந்தியாரார்வு. (௫௫)

தேம்பொழின்மேற்சேல்பாயச்செங்கழையைமேதியுண்ணப்
பூம்பழனஞ்சாரும்புலியூரே ........ மேம்படுமென்
டோளுக்காசைப்பட்டார்தொண்டாமியற்பகையில்
லாளுக்காசைப்பட்டாரார்வு. (௫௬)

கார்ப்புணர்ப்பித்பொற்கலையைக்காமுகர்க்காவேள்வரவைப்
போர்ப்பவனன்பார்க்கும்புலியூரே ........ பார்ப்பதியாம்
பெண்டனாகத்தடுத்தார்பேர்மணத்திற்சுந்தரனைத்
தொண்டனாகத்தடுத்தார்தோய்வு. (௫௭)

தென்னூர்பொழிலிடத்துஞ்செங்கனகமன்றிடத்தும்
புன்னாகத்தோடார்புலியூரோ .................. நன்னீரை
விட்டுவிளக்கிட்டார்வினைதுலைத்தார்மாட்டினுமன்
பொட்டுவிளக்கிட்டாருறைவு. (௬௮)

பெட்பின்முகில்கண்டாற்பிறந்திறந்தாலெற்றேருகைப்
புட்பரதங்காட்டும்புலியூரோ .................. யுட்பரிவாற்
கையாரமாயுரைத்தார்க்காத்தாற்கேழ்நூனூல்வர்க்
கொய்யாரமாயுரைத்தாரூர். (௬௯)

கட்டுறுகோட்டுப்பூகமலப்பூத்தேனூறிப்
புட்டரிக்கவீறும்புலியூரோ .................. சிட்டர்தொழ
மின்னாடகத்தினன்மேய்ந்தமன்றுளானந்த
நன்னாடகத்தினனாடு. (௭௰)

மேகம்பயில்குழலார்மென்களமுந்தண்பணையும்
பூகம்பொருவும்புலியூரோ .................. மாகமொடு
தாலம்பணிந்திடுவார்தாழ்பவளக்கோமர
மேலம்பணிந்திடுவார்வீடு. (௭௧)

கங்குல்வாய்த்தீபங்களுக்கும்வெயிலுக்குமணிப்
பொங்கராவிடாம்புலியூரோ .................. சங்கரா
வென்பாரிடத்தினனீமத்திடைநடித்த
வன்பாரிடத்தினன்வாழ்வு. (௭௨)

அல்லிச்சுனைகளினுமாலையினுநாரியே
புல்லிக்குடையும்புலியூரோ .................. கல்வித்
தலையைத்தாமோதினர்தம்மையர்ண்டெண்ணெண்
கலையைத்தாமோதினர்காப்பு. (௭௩)

வெற்பிணைக்குங்கொங்கைமின்னார்வீடுஞ்செந்தாமரையும்
பொற்பளிக்குஞ்சாரும்புலியூரோ .................. கற்பனையா
வோதங்கடந்துவந்தாரோதுதமிழ்க்கொண்டிருபொற்
பாதங்கடந்துவந்தார்பற்று. (௭௪)

மிக்ககதிர்த்தேர்விசும்பைமேலோர்தவத்தைவிருப்
புக்களவித்தாக்கும்புலியூரோ..................சக்கரத்தை
நந்தரிக்கிட்டன்புடையானுளுஞ்சிவகாம
சுந்தரிக்கிட்டன்புடையான்றேய்வு. (எ௫)

மன்னுமலைதந்துவந்துமாக்களிற்றைப்பெற்றுமைநேர்
பொன்னிநதிசூழும்புலியூரோ...............சென்னிமதிப்
பெம்மானிடக்கையான்பேரம்பலத்தாடுஞ்
செம்மானிடக்கையான்சேர்வு. (எ௬)

மேதகுவிண்டாவுறலான்மேலம்புலியுறலாற்
பூதரமொப்பாகும்புலியூரோ.................மோதிப்
பொருமாதங்கத்துரியார்போற்றுலகீரேழுந்
திருமாதங்கத்துரியார்சார்பு. (எஎ)

அங்காடியாங்கம்பலைசங்காரஞ்செறிவாற்
பொங்காழிநேராம்புலியூரோ......................சங்காழி
மாலாஞ்சரத்தர்மணமலிசெம்பொன்மடலைப்
போலாஞ்சரத்தர்புரி. (எ௮)

வாய்ந்தவலம்புரிப்பூமாத்தழுவிநந்தவனம்
பூந்துளவத்தோனும்புலியூரோ..............யாய்ந்தமலர்ச்
செங்கைக்குழையினர்திண்டோடொடுங்காதிற்
சங்கைக்குழையினர்சார்பு. (எ௯)

தாலம்படைத்தலர்க்கட்டாளெழுகலாற்பிரமன்
போலும்பொழில்சூழ்புலியூரோ...................யால
மருந்தக்கண்டங்கறுப்பாரல்லல்வினையன்பர்
வருந்தக்கண்டங்கறுப்பார்வாழ்வு. (௮௰)

மின்னுமணிவேழத்தான்மேவரம்பையால்வயல்கள்
பொன்னுலகுக்கொப்பாம்புலியூரோ.........யுன்னியொரு
கானமாவென்றூர்கருத்துற்றுருத்தெதிர்ந்த
தானமாவென்றூர்தலம். (௮௧)

மாகமுறைந்தாமைவெள்ளைவாரணமூர்ந்தோடைமகப்
போகிநிகராகும்புலியூரோ....................தோகைமயிற்
புள்ளேறிவருவார்போதமழலைக்குவந்தார்
வெள்ளேறிவருவார்வீடு. (அ௨)

தேன்றிகழுமாமலரோந்திப்பரவித்தாழ்ந்தடியார்
போன்றகழிசூழும்புலியூரோ....................மூன்றி
யுளத்தினயனத்தனுவந்துதொழுதேத்துங்
குளத்தினயனத்தன்குடி. (அ௩)

ஆசின்மதினாலளவிட்டாங்குயர்ந்துநீறணிந்து
பூசுரர்போலாகும்புலியூரோ....................மாசு
கழலாதவன்மதியார்கண்ணுரூர்கண்ணு
மழலாதவன்மதியாரார்வு. (அ௪)

எற்கோவணையாகிவரலாலெங்கரனேர்
பொற்கோபுரஞ்சேர்புலியூரோ....................நற்காற்
கிசைக்குஞ்சிலம்பினனீனாம்முகத்தா
னசைக்குஞ்சிலம்பினனூர்வு. (அ௫)

காற்காட்டியாறுதலைகாட்டியடுத்தோர்க்கயில்வேள்
போற்காவனஞ்சூழ்புலியூரோ....................பாற்கோலக்
குட்டிக்கங்கூட்டினர்கொச்சைமுகமாமனுக்கன்
றொட்டிக்கங்கூட்டினனூர். (அ௬)

மெய்ப்பவங்காய்ந்தங்கமலமிக்கசிவகங்கையது
பொய்ப்பின்மறைக்கொப்பாம்புலியூரோ...மைப்பனைபோற்
றிறங்கத்தனுக்கையர்தூயநெடுமால்வணயாற்
றிங்கத்தனுக்கையர்சார்பு. (அ௭)

காலாயிரத்தாற்கதிர்மணிச்சூட்டாற்சேடன்
போலாலயஞ்சேர்புலியூரோ....................பாலாழி
யந்தநஞ்சுமப்பார்தமையுங்களஞ்சடையிட்
டிந்தநஞ்சுமப்பாரிடம். (அ௮)

தக்ககலைதெரியறன்னுல்வியாசனையொப்
புக்கொடிக்கம்பஞ்சேர்புலியூரோ..............யெக்கியத்தி
பல்லுக்கெட்டாதவனூர்பாறப்புடைத்துமறைச்
சொல்லுக்கெட்டாதவனூர்தோய்வு. (அ௯

பாடுமிசையாற்றனக்கும்பத்தாற்சினகரம்வெண்
பூடணமின்னுளாம்புலியூரோ.........................வே
ணடித்தரிக்குங்கோவாரமரர் துயராலங்
குடித்தரிக்குங்கோவார்குடி. (௯௰

வான்மீதெழும்புகையான்மாவிரதத்தாற்கதிரோன்
போன்மாமகஞ்செய்புலியூரோ...................தென்மாரு
தோடாயிரந்தான்றுலங்கம்புயன்றலையை
யோடாயிரந்தானுறைவு. (௯௧

ஆங்கருணையோடமுதீந்தங்கவலைநீக்கிமடமீ
பூங்கலையிந்தொப்பாம்புலியூரோ...................வாங்குட்
வரங்கம்பலவாணன்வாயில்காத்தன்பர்க்
கிரங்கம்பலவாணனில். (௯௨

ஐயம்பெய்தேதாரணிமகிழிட்டங்கசன்போற்
பொய்யில்சத்திரஞ்சூழ்புலியூரோ...............பையரவ
மீதாம்புயத்தினர்மிக்கமுயன்மேலழுத்தும்
பாதாம்புயத்தினர்பற்று. (௯௩

மாற்புணர்ந்துநீறணிந்துமாமதிமேலிட்டுயர்ந்தோர்
போற்பலமாடஞ்சேர்புலியூரோ..........சூற்பெறுவெண்
கோடுந்தலைவளைப்பார்கூப்பமறைச்சேய்க்கயன்முன்
றேடுந்தலைவளைப்பார்சேர்வு. (௯௪

எப்போதுநன்மணந்தோய்ந்தேற்பவர்க்கிட்டைந்தருவெ
புப்பேசும்வீதிப்புலியூரோ.........மெய்ப்பான [ப்
நந்திப்பரியார்நளினத்தயுணரிக்குஞ்
சந்திப்பரியார்தலம். (௯௫

சோபனத்தைச்சேர்ந்துசெங்கோத்ராக்கியுயர்தோரணந்தா
பூபதிக்கொப்பாகும்புலியூரோ.........தாபரவெண் [ன்
டிக்கெனுமாசாரத்தார்சிட்டர்நெஞ்சுட்டித்திக்கு
மிக்கெனுமாசாரத்தாரில். (௯௬)

அம்மழைக்கண்ணாற்காலாலாடுதலாற்கேதனங்கள்
பொம்மன்முலையாராம்புலியூரோ............சம்மதியாய்ப்
பொங்கரவினன்பணிவார்பொற்சடைக்கிட்டோர்கிரணச்
செங்கரவினன்பணிவார்சேர்வு. (௯௭)

மாலகலமுற்றுமணிவடம்பூண்டிந்திரையாள்
போலிரதமூரும்புலியூரோ................பாலனைக்கொல்
வானகத்தையூன்றினார்வாளரக்கன்மாமுடிமேற்
கானகத்தையூன்றினார்காப்பு. (௯௮)

செல்வந்திருந்திடலாற்சேர்முடத்தாற்பிங்கலனேர்
புல்லுந்தெங்கோங்கும்புலியூரோ...........மெல்லிதழ்வாய்
விண்டகடுக்கையார்மேனுளமாருக்கா
வுண்டகடுக்கையாரூர். (௯௯)

மாகமண்டலந்தாங்கிவண்டமிழ்பூத்தாறுவிட்டுப்
பூகமுங்கும்பன்சீர்ப்புலியூரோ..............யாகமங்கள்
கூறிடுமாவாக்கினார்கூடலிறைக்காநரியை
யேறிடுமாவாக்கினாரில். (௱)

முற்றிற்றுமுற்றும்.

மன்னுபுலியூர்க்குவகுத்தவெண்பாநூறவற்றி *
லுன்னிலிருபத்தைந்தோர்வயனம்...............பின்னுமுள
வையைந்தொருவயனமையைந்தொருவயன *
மையைந்தொருவயனமாம். *

இப்புத்தகம்வேண்டியவர்கள் புரசைப்பாக்கம் பிரமாத்தைமுதலியார்தெருவிலிருக்கும் கிருஷ்ணப்பபூபதிநாயகர்காகிதப்பட்டடையில்வாங்கிக்கொள்ளப்படும்.

# பத்திரிகை.

ஸ்காந்தம்
தொல்காப்பியமூலம்
இலக்கணவிளக்கமூலம்

தருக்கசங்கிரகமூலமும் உரையும்

முத்திமுடிவுரை
ஒருபாவுண்மையுபதேசவுரை

அகப்பொருள், புறப்பொருள் } உரை.

திருவாரூர்க்கோவை
திருத்தணிகாற்றுப்படை
இன்னாநாற்பது
சங்கச்செய்யுள்கள்

வடிவுடையம்மை பிள்ளைத்தமிழ்

சிவகாமியம்மை பிள்ளைத்தமிழ்

குளந்தைப்பிள்ளைத்தமிழ்
தில்லைவெண்பா
திருச்செந்தில்வெண்பா
கலசைவெண்பா
குருகைவெண்பா

திருவிளையாடற்சாரம்
தில்லையமகவந்தாதி
திருப்பழனியமகவந்தாதி
திருமுல்லைவாயல் அந்தாதி
திருக்குடந்தையந்தாதி
அத்திகிரியந்தாதி
திருக்குறுங்குடிமாலை
பழனிப்பஞ்சரத்தினமாலை
கயாகரநிகண்டு

சூடாமணிநிகண்டில் பன்னிரண்டாவதுதொகுதி

அபிதானமாலை, மருதூரந்தாதி, கந்தரந்தாதி, திருப்புகலூரந்தாதி, திருப்பழமலையந்தாதி, திருச்செந்தில்-நிரோட்டகயமகவந்தாதி } உரை.